செ.கு. எண் :- 263 நாள் :- 20-12-2011

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 20.12.2011

திருநெல்வேலி மாவட்டம், **மணிமுத்தாறு அணையிலிருந்து** பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையிலிருந்து பாசனத்திற்காக **21.12.2011** முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள **12,018 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

*வெளியீடு, இயக்குநர்*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*சென்னை-9*